**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி**

# OS. No. 11/2019

17.03.2026

## D.W.1- முனியம்மாள்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

தாவா சொத்தின் சர்வே எண் தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்தின் விஸ்தீரணம் 6 ஏக்கர் ஆகும். தாவா சொத்தின் நான்கு மால் தெரியும். தாவா சொத்து 6 ஏக்கர் என்பது தவறு என்றால் சரியல்ல. நானும், மாயக்காளும், பெருமாயி மற்றும் சுப்பையாவிடமிருந்து கிரையம் பெற்றோம். எவ்வளவு கிரையம் வாங்கினோம் என்றால் ஞாபகமில்லை. தாவா சொத்து 3 ஏக்கர் 93 சென்டு என்றால் சரிதான். சுப்பையாவுக்கு தாவா சொத்து எப்படி வந்தது என்று தெரியுமா என்றால் தெரியாது. ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். சுப்பையாவிற்கு தாவா சொத்து பூர்வீக சொத்தா என்றால் சரிதான். சுப்பையாவின் அப்பா பெயர் கருப்பத்தேவர் என்றால் சரிதான். தாவா சொத்து முன்பு கூட்டுறவு சொசைட்டிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி கூட்டுறவு சொசைட்டியிடமிருந்து கருப்பத்தேவர் 1942ல் கிரையம் வாங்கினார் என்றால் தெரியாது. சுப்பையாவுடன் பிறந்தது அய்யாவு, அமுலம்மாள், பழனி என்றால் சரிதான். கருப்பத்தேவர் சொத்து நான்கு பிள்ளைகளுக்கும் பாத்தியம் என்றால் சரியல்ல. மேற்படி நான்கு நபர்களும் தாவா சொத்தை அனுபவம் செய்தார்கள் என்றால் சரியல்ல. கருப்பத்தேவர் மனைவி பெயர் சீனியம்மாள். தாவா சொத்து சீனியம்மாளின் தந்தை வழி சொத்தாகும். தாவா சொத்து சீனியம்மாளின் கணவர் சொத்து என்றால் சரியல்ல. சுப்பையாவுக்கு, சீனியம்மாள் 3 பத்திரங்கள் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி பத்திரங்களை நான் படித்து பார்க்கவில்லை என்றால் சரிதான். சுப்பையாவின் முன்பத்திரத்தை பார்த்து தான் கிரையம் வாங்கினேன். நான் கிரையம் பெற்ற பத்திரத்தில் சுப்பையாவின்

உடன்பிறந்த பழனி, அய்யாவு, அமுலம்மாள் ஆகியோர்களிடம் கையெழுத்து வாங்கவில்லை என்றால் சரிதான். சீனியம்மாள், சுப்பையாவிற்கு தனிப்பட்ட முறையில் பத்திரங்கள் எழுதிக்கொடுக்க உரிமையில்லை என்றால் சரியல்ல. நான் கிரையம் பெற்ற பத்திரம் செல்லாது என்றால் சரியல்ல. அய்யாவு, பழனி, அமுலம்மாள ் ஆகியோரின ் 3/4 பங்கை மேற்படி கிரைய பத்திரம் கட்டுப்படுத்தாது என்றால ் சரியல்ல. தாவா சொத்து கூட்டு அனுபவத்தில ் இருக்கிறது என்றால ் சரியல்ல. தாவா சொத்தில் நாங்கள் இருவரும் எழுதிக்கொடுத்த தானம் மற்றும் கிரையம் செல்லாது என்றால் சரியல்ல. தாவா சொத்தை கிரையம் மற்றும் தானம் பெற்றவர்கள் பத்திரங்களின்படி அனுபவம் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதி கோரும் பரிகாரம் வாதிக்கு கிடைக்கதக்கது என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.03.17 18:21:16 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.